# தென்மொழி

ஆசிரியர்:
பெருஞ்சித்திரன்

சுவடி 13. | விலை:
ஓலை: 7 | உரு: 1.


## தமிழா, நீ எங்கே?

ஆரங்கே? தமிழ் மகனா? இங்கே வா வா!
அன்றிருந்த நின்முன்னோர் தொகுத்தளித்த,
பேரெங்கே? ஊரெங்கே? பிழைப்பு மெங்கே?
பேச்செங்கே? மூச்செங்கே? விளங்கி நின்ற
சீரெங்கே? சிறப்பெங்கே? முகம் நாணாத
செந்தமிழ்த்தாய் உலாவர நீ செய்து தந்த
தேரெங்கே? வீறெங்கே? இலக்கியஞ் செய்
திறமெங்கே? உரமுற்றும் போன தெங்கே?

கொடையெங்கே? நடையெங்கே? மறவர் ஊர்ந்த
கொல்களிறு சூழ்ந்துவருந் தூவெண் கொற்றக்
குடையெங்கே? படையெங்கே ஆரங் கென்று,
குரலுயர்த்தி விரல்நீட்டி அயலார்க் கிட்ட
தடையெங்கே? நின்னை தவறி னோரின்
'கலையெங்கே' என்பாயத் தருக்கு மெங்கே!
தொடையெங்கே? பாவலாதங் கூட்ட மெங்கே?
தொல்பெருமை நின்னை விட்டுப் போன தெங்கே?

வாய்மையெங்கே? அருளெங்கே? சான்றோர் எங்கே?
வான்தடவி முகில்முட்டுங் கலைகள் எங்கே?
தூய்மையெங்கே? ஒழுங்கெங்கே? கணவற் பேணித்
தொல்மறவக் கூட்டத்தை ஈன்று தந்த
தாய்மையெங்கே? பெண்மையெங்கே? தவறு நேரின்
தம்முயிரை வெறுத்தொதுக்கும் மானமெங்கே?
நோய்மையிலாத் திறமெங்கே? உள்ள மெங்கே?
நொடிக்குநொடி தாழ்ந்திழிந்து போன தெங்கே?

[தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க]

# திருவிழந்தோம்.

திருவள்ளுவர் ஆண்டு விழா சேலத்தில் மிகச் சிறப்புடன் நடந்து கொண்டிருந்தது. மொழிஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமை தாங்கியிருந்தனர். பல புலவரும், அறிஞரும் பேசி முடித்தனர். தலைவரவர்கள் தம் பின்னுரையில் அன்று பேசிய அறிஞர் தம் ஏற்றத்தை அழகிய முறையில் நகைச் சுவையோடு விளக்கி முடித்தனர். கூட்டத்தில் ஒருமுகமாய் நிறைவேறிய தீர்மானங்கள் தலைவரால் படித்துக் காட்டப்பட்டன. இந் நிகழ்ச்சி முடிவுறும நிலையில் செயலாளர் நன்றிகூறவேண்டி மேடையேறி ஒருபுறம் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. பாவாணர் தமக்கே உரிய குரலில் என்ன? என்று உரக்கக் கேட்டார். 'புதிய தீர்மானம் ஒன்றுள்ளது' என்று ஒரு குரல் வந்தது. செயலாளர் அவ்விடத்திற்கு ஓடினார். அத் தீர்மானத்தை அறிந்துகொண்டு வந்து பாவாணரின் காதுகளில் மெதுவாகச் சொன்னார். உடனே தலைவர் புன்னகையோடு கூட்டத்தைப் பார்த்து ஏறுபோல் நின்றார். கூட்டத்தார் எல்லோரும் தலைவர் ஏது சொல்லப் போகின்றாரோ என்று தம் கூர்ஞ்செவிகளை நீட்டிக்கொண்டிருந்தனர் 'கணீர்' என்ற பெருங்குரலில், பாவாணர் "நாம் திருவை இழந்தோம்'' என்றனர். உடனே கூட்டத்தார் அதன் உட்பொருளறிந்து மகிழ்ச்சியால் கைதட்டி ஆரவாரஞ் செய்து அடங்கினர். உடனே தலைவர், "அதனால் பிறர் சிரி சிரி (ஸ்ரீ, ஸ்ரீ) என்று சிரிக்கின்றனர்.'' என்று மீண்டுஞ் சொன்னார். மகிழ்வு இரட்டிப்பாயிற்று. அந்த மகிழ்வொலி அடங்க நெடுநேரம் ஆனது.

பெயர் முன் 'ஸ்ரீ' என்று போடாமல் 'திரு' என்றே போட வேண்டும் என்பதே அத் தீர்மானம். அதை ஆழமாக உள்ளத்தில் படியுமாறும், அழகாகவும் எடுத்துச்சொன்ன மொழிஞாயிறு அவர்களின் திறன் வியந்து பாராட்டுற்தரியது.

---

[முதற் பக்கப் பாடல் தொடர்ச்சி]

*தந்திறனால் அல்லாமல் உயிர்வா ழாத*
*தாளெங்கே? ஆண்மையெங்கே? நேர்மையெங்கே?*
*செந்தமிழ்த்தீம் பாமணக்கும் வாய்கள் எங்கே?*
*செழும்பாடல் மகிழ்ந்துண்ணுஞ் செவிகள் எங்கே?*
*சிந்திசைக்கும் தெருக்களெங்கே? பாணர் எங்கே?*
*சித்துரைப்பத் துறவோர்தம் மறைகள் எங்கே?*
*மந்திரயில் சோலைகளும் மலைகள் தாமும்,*
*மறம்பயிலும் களமாகிப் போன தெங்கே*

*அன்றிருந்த அறவல்லார் யாத்துத் தந்த*
*அறமெங்கே? பொருளெங்கே? இன்ப மெங்கே?*
*குன்றிருந்த விளக்கெனவே உலகோர்க் கீந்த*
*குறள்நெறிக்கு நடைமாறாத் தமிழன் எங்கே?*
*இன்றிருந்த நாகரிகப் போலிப் போக்கின்,*
*இழிநிலைக்கு முடிவெங்கே? விடிவு மெங்கே?*
*மன்றிருந்த தமிழெங்கே? அதுபோ மாயின்*
*மறுநொடியில் நானெங்கே? நீதான் எங்கே?*

# தென்மொழி

இலக்கிய இதழ்

சுவடி : 13 ஓலை : 7

[ நிறுவனம் தி. பி. 1990 (1959).]


“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர் நின்றே!


மடங்கல்-கன்னி-தி. பி. உ00எ-ஆகத்து-செப்-'1976.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.


5-2-76 முதல்



ஆசிரியர் எழுத இயலாத நிலையில் உள்ளார். —அமைச்சர்.

# மெய்ப்பொருட் சொற்கள்.

*[இக்கட்டுரை மொழிஞாயிறு ஞா, தேவநேயப் பாவாணர் அவர்களின் "சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது.]*

உலக மக்கட்குள் தமிழர் தலைசிறந்த நாகரிகமுடையவர் என்பதை அவருடைய மொழியமைதியுங் கருத்துமே காட்டும்.

சொல் வழக்கு :

பண்டைத் தமிழகத்தில், புலவர்கள் மட்டுமன்றிப் பொது மக்களும் சிறந்த அறிவுடையவரா யிருந்தனர். ஆதலால் பொருள்களின் உண்மை யியல்புகளை அறிந்து, அவற்றிற்கேற்பப் பெயரிட்டு வழங்கினர்.

இயற்கையாய் எல்லாப் பொருள்களும் உயிர் உயிரில்லது உயிருள்ளது என மூவகைப் பட்டிருத்தலைக்கண்டு, அவற்றை முறையே **உயிர், மெய், உயிர்மெய்** என அழைத்தனர் முது தமிழர்.

உடம்பை உய்ப்பது அல்லது செலுத்துவது உயிர், உள்ளிருக்கும் உயிரை மேலாகப் பொதிந்திருக்கும் உடம்பு மெய்; உயிரையுடைய மெய் உயிர்மெய். [1]

**உடல், உடம்பு, குடம்பை, கூடு, மெய், யாக்கை, முடை, கட்டை** என உடம்பிற்கு வழங்கும் பெயர்களின் கரணியத்தை நோக்கின், அப்பெயர்களை இட்ட மக்களின் உயரிய அறிவு புலனும்.

உயிருடன் சேர்ந்தே இயங்குவது அல்லது உயிருடனிருப்பது உடல் அலலது உடம்பு; குஞ்சு பொரித்த பின் தொடர்பு நீங்கும் முட்டைக் கூடுபோல, உயிரை விட்டு நீங்குவது குடம்பை அல்லது கூடு. [2] உயிரை மேலாகப் பொதிந்திருப்பது மெய்; தோல் நரம்பு எலும்பு தசை அரத்தம் முதலிய எழுவகைத் தாதுக்களால் யாக்கப் பெற்றிருப்பது அல்லது முடையப்பட்டிருப்பது யாக்கை அல்லது

---

*1. உயிரும் மெய்யும் கூடியது உயிர் எனக் கூறுவது பொருந்தாது. இக்கூற்று உயிர்மெய் என்னுஞ் சொல் உலக வழக்கற்றபின் எழுந்தது. பிராணனையுடையது பிராணி என்பதுபோல, உயிரையுடைய மெய் உயிர்மெய் என்பதே பொருத்தமாம்.*

*2. "குடம்பை தனித்தொழிய புட்பறந் தற்றே — உடம்போடுயிரிடை நட்பு" என்றார் (குறள் 333) திருவள்ளுவர். "கூடுவிட்டிங் காவிதான் போயினபின்பு" என்றார் (நல்வழி 22) ஔவையார்.*

முடை; உயிர் நீங்கியபின் கட்டைபோலக் கிடந்து எரிவது அல்லது மண்ணொடு மண்ணாய்ப் போவது கட்டை.

உயிரில்லாத பொருள்கள் எத்தனையோ வேறுபட்ட வண்ணம் வடிவு அளவு சுவை முதலிய தன்மைகளையுடையனவா யிருந்தாலும், அவற்றையெல்லாம் உடம்பொடு தொடர்பு படுத்தி ஒன்ருகக் கொண்டு, அவற்றுக்கு உடம்பு அல்லது மெய் என ஒரே பெயரிட்ட தற்தக் கரணியம், அண்டத்தையொத்தது பிண்டம் என்றும், உயிரற்ற பொருளனைத்தும் ஐம்பூதச் சேர்க்கை அல்லது வேறுபாடென்றும், முன்னைத் தமிழர் அறிந்திருந்தமையே.

பொருள்களையெல்லாம் இங்ஙனம் மூன்று வகையாய் வகுத்த தோடமையாது, உயிருள்ள பொருள்கட்குள்ளும் பகுததறிவுள்ளது இல்லது என மேலுமொரு பாகுபாடு செய்து, அதற்கேற்ப வினையீறு வேறுபடுத்திக் கூறிவந்தனர் பழந்தமிழர்.

விலங்கினத்திலும் பறவையினத்திலும் ஒருசார் மரங்கட்குள்ளும் ஆண் பெண் என்னும் பால் வேறுபாடிருப்பினும், அவ்வேறுபாடு கண்டு அவற்றுக்கு வெவ்வேறு பெயரிட்டு வழங்கினும், வினை கொடுத்துக் கூறும்போது, பகுத்தறிவற்ற உயிர்களின் பால் வேறுபாடு காட்டாது; 'காளை வந்தது', 'ஆ வந்தது', 'காளைகள் வந்தன', 'ஆக்கள் வந்தன' என எண் வேறுபாடு மட்டும் காட்டியும், பகுத்தறிவுள்ள உயிர்கட்கு 'மகன் வந்தான்', 'மகள் வந்தாள்' என எண்ணோடு பாலுங் காட்டியும் வந்தனர் பழந்தமிழர்.

மக்கள் பகுத்தறிவுள்ள உயிரினமாயினும், அவருள் எல்லாரும் அதைப் பெருமையால், பகுத்தறிவடையாத குழந்தைகளையும், பிள்ளைகளையும் 'குழந்தை வருகிறது', 'பிள்ளை வருகிறது' எனப் பாலீறு கொடாது எண்ணீறே கொடுத்துக் கூறியும், பருவமடைந்தவருள்ளும் பலர் பகுத்தறிவைப் பெருமையால் அவரை 'மாக்கள்' என்று பிரித்தும் வந்தது, பழந்தமிழரின் பெரும் புலமையையுணர்த்தும்,

*"மாவும் மாக்களும் ஐயறி வினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"* *(மரபியல்-32)*

*"மக்கள் தாமே ஆறறி வுயிரே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"* *(மரபியல்-33)*

என்று தொல்காப்பியரும்,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்" (குறள்-420)

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்" (குறள்-1071)

எனத் திருவள்ளுவரும், மக்கள் மாக்கள் என இருவகைப்படுத்திக் கூறுதல் காண்க.

மாந்தன் இயற்ற முடியாத இயற்கையை இயற்றிய ஒரு தலைவன் இருத்தல்வேண்டுமென்றும், அவன் எல்லாவற்றையுங் கடந்தவன் என்றும் கண்டு அல்லது கொண்டு அவனைக் கடவுள்[1] என்றனர் முதற்றமிழர்.

மக்கள் குடியிருக்கும் மனைக்குத் தமிழில் வீடு என்று பெயர்; பேரின்ப உலகிற்கும் வீடு என்றே பெயர். இவ்விரு பெயரும் ஒரு சொல்லே.

மாந்தன் பகலெல்லாம் உழைத்துக் களைத்து உணவு அல்லது பொருள் தேடி, மாலைக்காலத்தில் மனையாகிய வீட்டை யடைந்து இளைப்பாறி யின்புறுகின்றான்; உழைப்பாளி போன்றே ஒருநாள் வழிப்போக்கனும் பகலெல்லாம் நடந்திளைத்து இராக் காலத்தில் ஒரு வீட்டில் தங்கி இளைப்பாறி யின்புறுகின்றான். வேலையை விடுதலுக்கும் வழிநடையை விடுதலுக்கும் வீடு என்று பெயர். 'விடுமுறை', 'விட்டிறுத்தல்' என்னும் வழக்குகளையும் நோக்குக.

எழுவகையான எல்லையற்ற பிறவிகளில் உழன்று அறத்தை ஈட்டிய ஆதன் (ஆன்மா) அல்லது அப்பிறவிகளில் அலைந்து திரிந்து வீட்டு நெறிச்செலவை முடித்த ஆதன் (ஆன்மா) அடையும் பேரின்ப வுலகும் வீடு போலுதலின் வீடெனப்பட்டதென்க.

சிலர் பிறப்பு இறப்பு என்னும் சொற்கள், முறையே, பகர மெய்ச் சேர்க்கையும் அதன் நீக்கமும் பெற்றிருப்பதால், உயிர் உடம்பொடு கூடுதலையும் அதைவிட்டு நீங்குதலையும் குறிக்குமென்று கூறுவர். பிறப்பு என்பது 'பிள்' என்னும் வேரினின்றும் இறப்பு என்பது 'இறு' என்னும் வேரினின்றும் பிறந்திருப்பதாலும், பிணங்கு இணங்கு எனப் பிறவெதிர்ச் சொற்களும் பிறப்பு இறப்பு என்பவை போன்றே யமைந்திருப்பதாலும், அது போலிக் கூற்றென்க.

---

1. கடவுள் என்னும் பெயர்க்கு 'எல்லாவற்றையும் இயக்குபவன் அல்லது செலுத்துபவன்' என்றும் பொருளுரைக்கலாம். கடவுதல்—செலுத்துதல்.

# தென்மொழி நலமில்லை;
# நீங்கள் நலமா?

(சுவடி 7, ஓலை 4-இல் வெளிவந்தது.)

'தென்மொழி' 1959-ல் தொடங்கப்பெறுகையில் எப்படி நான் தனியனோ, இன்றுமப்படியே தனியன். இடையில் ஏறி இறங்கியவர் சிலர். தென்மொழித் தொடக்கத்தில் நான் அரசினர் அலுவலில் இருந்ததால் புனைபெயரில் என் உயிருக்கினிய அன்பர் ஒருவர் துணையுடன் இயங்கினேன். உண்மையான "தமிழ் வளர்ச்சிக்கே இத் தமிழகத்தில் இடம் இல்லை. தனித்தமிழ் வளர்ச்சிக்கோ கனவிலும் இடமில்லை" என்று கூறி என் முயற்சியை ஏளனத்தோடு பார்த்தவர் அன்று பலர். இரக்கத்தோடு பார்த்தவர் சிலர். பிழைக்கத் தெரியாதவன் என்று குறை கூறாதவர்களே இல்லை.

அடிகளார் (அடிகளார் என்றாலே தமிழகத்தில் மறைமலையடிகள் ஒருவரே) தொடங்கிய இத் தனித்தமிழ் இயக்கம் அவருடனேயே மறைந்தது என்று சொல்லும்படி அன்றிருந்தது. அவரைத் தமிழ்ப் பகைவர்கள் எந்த அளவு வெறுத்தனர் என்பதை அளவிடவே முடியாது. பார்ப்பனரின் துணையில்லாமல் பிழைப்பதே அரிது என்று கருதிய தமிழ்ப் புல்லுருவிகள் தமிழருக்கே பெருந் தடையாய் நின்றனர். பாவாணர் ஒருவர் வாயில்தான், நல்ல தமிழைப் பார்க்கலாம். ஆனால் பாவாணர் எத்தனைத் தமிழர்களுக்கு அறிமுகம் ஆகியிருந்தார்?

இப்பொழுது தாங்கள் பேசுவதெல்லாம் எழுதுவதெல்லாம் தனித்தமிழ் என்று பெருமை பேசுகிறவர்கள் மிகுதி. தனித்தமிழ் என்றால் வெறுப்போடு பார்க்கின்ற நிலைபோய் வியப்போடும் விருப்போடும் பார்க்கின்ற நிலை இன்று. இதற்கு முழுக் காரணியமும் தென்மொழியே என்று சொல்லித் தருக்கிக்கொள்ளும் தலைக்கொழுப்பு எனக்கில்லை. ஓரளவுக்குத் தென்மொழி தனித்தமிழை – தனித்தமிழ் உணர்ச்சியை மறந்து போகாமல் தமிழர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தது என்ற அளவில் நான் மன நிறைவு கொள்ளமுடியும். தென்மொழி இதுவரை எழுதிய ஏறத்தாழ ஒன்பதினாயிரம் பக்கங்களில் தென்மொழித் தொடர்பற்ற விளம்பரத்திற்காக வீணடித்த பக்கங்கள் நான்கோ ஐந்தோ! விளம்பரத்திற்கென வந்த வருவாய் பத்தாண்டுகளில் ஏறத்தாழ எழுபத்தைந்து உருபாக்கள். இன்று வெளிவரும் நூற்றிருபது பக்கங்கள் உள்ள சில தாளிகைகளில் ஒவ்வொரு வெளியீட்டிலும் 60 அல்லது 70 பக்கங்கள் வெறும் விளம்பரமாக வெளிவரும் நிலையினையும் தென்மொழியையும் ஒப்பிட்டு நோக்

கிறல் தென்மொழி எதற்காகத் தொடங்கி வெளியிடப் பெறுகின்றது என்ற உண்மை தென்மொழியைப் படிக்காதவர்களுக்குக் கூட எளிதில் புரியும்.

தென்மொழி தலையாய கொள்கை ஒன்றினை நோக்கித் தொடங்கப்பெற்ற ஓரிதழ். கொள்கைக்காக நடத்தப் பெறுகின்ற வேறு இதழ்களும் இருக்கலாம். இல்லையென்று சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் அவற்றிற்கும் தென்மொழிக்கும் ஒரு பெருத்த வேறுபாடு உண்டு. தென்மொழி எதைக் கொள்கையாகக் கொண்டதோ அந்தக்கொள்கைக்குத் துளியும் மாறின்றி மறுவின்றி அதன் போக்கு அன்றும் இன்றும் அமைந்துள்ளது. இனியும் நான் உள்ளவரை அப்படியே அமையும்.

விரும்புபவர்களுக்கு மருத்துவம் பார்க்கலாம். விருப்பம் இல்லாதவர்களுக்கு மருத்துவம் பார்க்க முடியாது. இனி விருப்பம் இல்லாவிட்டாலும் தாழ்வில்லை; வெறுப்புள்ளவர்களுக்கு அறவே மருத்துவம் பார்க்க இயலாது. இனி, அந்த வெறுப்பும் பகையாக இருக்குமானல் மருத்துவன் ஊரை விட்டே ஓடவேண்டியதுதான். இனி, பகையென்ருலும் தப்பித்துக்கொள்ள வாய்ப்புண்டு; உட்பகையாக இருக்குமேல் மருத்துவனுக்கு என்றைக்கு உயிர் போகுமோ சொல்லமுடியாது.

தமிழர்களை நாகரிகமுற்றவர்கள், பண்புள்ளவர்களாகத் தமிழ்ப் பேராசிரியர்கள்; தமிழர்களை ஏமாற்றிப் பணம் பறிப்பவர்கள் ஒப்போலை கேட்கும் அரசியல்காரர்கள் முதலியோர் கூறி மகிழலாம். இலக்கியச் சொற்பொழிவாளர்களைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. அவர்கள் கூறும் பண்புகளை நானும் ஒப்புக்கொள்ளாமல் இல்லை. ஆனல் அப் பண்புகளுக்குரிய தமிழர்கள் இன்று வாழ்கின்றனரா என்பது எனக்கு ஐயமே! (என்னையும் உள்ளடக்கியே கூறுகின்றேன்) இன்றைக்குள்ள தமிழர்கள் நோயாளிகள்; தமிழ்ப்பண்பை அறவே மறந்தவர்கள். இனநலம் பேணுதவர்கள். தம் இனத்தையே கொள்ளை அடிப்பவர்கள் தம் உடன் பிறப்புகளையே பகைவர்களாகக் கருதுபவர்கள். இவர்களுக்கிருக்கும் நோய் ஒன்றிரண்டன்று! உடல் முழுவதும் நோய்.

இவர்கள் நோயைக் குணப்படுத்த அரிதாக் கனக்கண்டேன், வானக் கோட்டை கட்டினேன், குதிரைக் கொம்பிற்கு அலைகின்றேன்; முயற்கோட்டை எண்ணி நடையாய் நடக்கின்றேன். என் பின்னல் வருபவர்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர ஒன்றும் மிஞ்சப்போவதில்லை என்று எனக்குத் தெரியும். அவர்கள் உருப்படியாகப் போவதில்லை என்பதை நான் அறிவேன். ஏனெனில் எனக்குப் பாராட்டத்தெரி

யாது; பொய்யாகப் புகழ்ந்துரைக்க நான் விரும்பமாட்டேன்; நடிக்கத்தெரியாது; அன்பை மறைக்கத் தெரியாததுபோலவே அருவருப்பையும் மறைக்கத் தெரியாது; சிரிப்பை அடக்கத் தெரியாதது போலவே சினத்தையும் அடக்கத் தெரியாது. வினைப்பாட்டில் நெருப்பைப்போல் காய்கின்றேன். என் சொல்லில் என்றும் குளிர்ச்சி காட்டியதில்லை, உள்ளத்தை உதட்டால் எழுதுகின்றேன்; பேசுகின்றேன்; யாருக்காகவும் நான் அஞ்சியதில்லை; நடுங்கியதில்லை; குழைந்தது இல்லை, கோணலானதுமில்லை, நோக்கம; நோக்கம்; வினை; வினை.

எனவே என்னை நாடி வந்தவர்களுக்கு வறட்சியே காத்திருந்தது, தொண்டு குளிர்ந்ததாக இருந்ததை நான் என்றும் கண்டதில்லை. பத்தாண்டுகளுக்கு முன், எப்படி, தென்மொழியைக் கொணரப் பாடு பட்டேனோ, அதே பாடுதான் இன்றும், தென்மொழி அமைப்பு ஒருவாறு வளர்ந்துள்ளது உண்மைதான். ஆனால் அதன் முயற்சியில் ஒரு மாற்றமுமில்லை, அன்று அச்சடிக்க அச்சகத்தைத் தேடினேன்; இன்று அச்சகம் உள்ளது; ஆளைத் தேடுகின்றேன், ஆள் என்றால் தொழிலாளர் மட்டும் அல்லர், தொண்டர்களுந்தாம்,

தென்மொழிக்கு இங்கெடுத்துக் கூறமுடியாத பல இடர்ப்பாடுகள், அதனால் தென்மொழி ஏன் காலந்தாழ்ந்து வருகின்றது என்பதற்குரிய கரணியத்தை முழுமையாகச் சொல்லிவிடமுடியாது. மொத்தத்தில் அதற்கான விடை இதுதான்,

தென்மொழி வரும்போது தவறாமல் வந்துகொண்டே இருக்கும், படிக்கும்போது படித்துக்கொள்ளுங்கள், பயன் கண்டால் மேலும் படியுங்கள், இல்லையெனில் தூக்கி வீசிவிட்டு ஒரு குமுதத்தையோ, ஆனந்த விகடனையோ, கல்கியையோ வாங்கிப் படித்து மகிழ்ந்து கொள்ளுங்கள், இப்படியிப்படி யெல்லாம் இருந்தாலன்றோ கொள்கையை வளர்க்கலாம என்கின்றீர்களா? அதற்கு நான் எப்படி எப்படி மாறி வளைந்து நடிக்கவேண்டும் தெரியுமா? அதுதான் இந்த பிறவியில் என்னால் முடியாதே! நான் என்ன செய்ய? உயிரை இழந்தாலும் நான் இழந்துவிடுவேன், என் உள்ளத்தை இழக்க முடியாதே! இது போகட்டும், பொருளியலில் என்ன? நான் ஆயிரமாயிரமாகவா வைத்திருக்கின்றேன், நினைத்தவுடன் இதழை அச்சிட்டு வெளிப்படுத்திவிட...? அன்றாடம் காய்ச்சி, அஃதாவது அஞ்சல்காரன் கொண்டுவரும் பணவிடைகளின் அளவைப் பொறுத்துதான் அன்றைய தென்மொழி வேலை! அச்சு; அமைப்பு; தொண்டு; பயன் முதலியவெல்லாம், என் சமையலே அதைப் பொறுத்ததுதான், இதையெல்லாம் ஏன் இவ்வளவு பச்சையாக எழுதுகின்றேன் என்றால்,

என் உள்ளத்தைத் தவிர நான் என்னை என்றோ இழந்துவிட்டேன். இப்போது நான் மானத்தையும் கருதவில்லை, மதிப்பையும் எதிர் பார்க்கவில்லை, வேறு யாருக்காகவும் நான் அவற்றை இழக்கவில்லை, தமிழுக்காகவும், அந்த மொழியைத் தத்துப் பித்தென உளறிக்கொட்டும் தமிழருக்காகவுந்தான் இழந்தேன், ஆகவே தென்மொழியின் காலத் தாழ்ந்தத்திற்கு நான் மட்டும் பொறுப்பாகேன்.

என்னால் செய்ய முடிந்ததைச் செய்துகொண்டே சாவேன். இயன்றவரை கட்டாயம் செய்வேன், எனவே கவலைப்படாதீர்கள், தென்மொழி நிற்காது வரும். அவ்வப்பொழுதுள்ள நிலைகளுக்குத் தக முன்னும் பின்னும் வந்துகொண்டுதான் இருக்கும். அவ்வளவுதான் என் வெயர்வையால் விளைக்கும் வேளாண்மை! முடிந்தால் பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

## தனித்தமிழ் பெயர் மாற்றம்.

வெங்காலூர் தென்மொழி அன்பர், இ. சுப்பிரமணியன் என்னும் நல்லார், தம்பெயரைப் பொன்னி வளவன் என்று மாற்றிக்கொண்ட நினைவாகத் தென்மொழிக்கு உரு. 20 அன்பளிப்பு செய்துள்ளார். அவர் வாழ்கவெனத் தென்மொழி வாழ்த்திசைக்கின்றது.


# "தமிழ்ச்சிட்டு"

## சென்னை - 5.

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு. |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4-00 | 9-00 | 9-00 |
| தனியிதழ் ,, | 0-35 | 0-75 | 0-75 |

(அஃறையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஒரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

# உலகியல் நூறு.

—பெருஞ்சித்திரன்—

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

## 7. ஆண்மையியல்

### 1. கடமை நிலை.

கடனென்ப காளையர்க்குக் காட்சி! கடனுக்
குடனென்ப நல்லூக்கம்! உற்ற—மடனென்ப
தாளறவு; ஒன்றில் தகவின்மை! எஞ்ஞான்றும்
கோளறவு கூடாது மன்! 31.

பொழிப்பு : ஆடவர்க்கு, குறிப்பாக இளைஞர்க்கு, அறிவு பெறுதலே முதற் பெருங் கடமையாகும். அக்கடமைக்கு இயைபாக இருத்தல் நல்லனவற்றின்பால் கொண்ட உந்துணர்வாகும். அவர்களுக்கு வந்து பொருந்தும் அறியாமை எல்லாம் முயற்சியற்று இருத்தலும் ஒரு வினையிலும் தகுதி பெறுதிருப்பதும் ஆகும். எந்நிலையிலும் தமக்குச் சரியென்று ஏற்றுக்கொண்ட கொள்கையைக் கை நெகிழ்க்குந் தன்மையும் கூடாதாம்; அஃது இரங்கத்தக்கது.

## 7. VIRILITY.

### 1. ON DUTY.

For youth to know is duty main ;
To enthuse is good aid to gain.
Ignorance is sloth, not apt to one ;
Never lose life's aim ; it must be won. 31.

For men in general and the youth in particular, the first and foremost duty is to acquire knowledge. An indispensable aid to this is enthusiasm. Ignorance comes through idleness and ineptitude for any work. We should never lose hold of the aim once accepted as proper. It is a pity to do so.

## உ. ஆளுமை நிலை.

ஆளுமை என்பநல் ஆண்மை ! அதுதவிர்ந்தால்
தாளுமை அன்றே தவிர்ந்தழிக்கும்—வாளமைந்த
வல்லான் எனினும் வகையறிந்து சூழாக்கால்
எல்லாம் இழுக்குந் தரும் ! 32.

பொழிப்பு : நல்ல ஆளுமை என்று சொல்லப் பெறுதலே ஆண்மையாகும். அது தவிர்க்கப் பெறுமானல் அப்பொழுதே முயற்சி தவிர்ந்துபோய் தன்னை அழித்துவிடும். ஒள்ளிய அறிவு வாய்க்கப்பெற்ற வல்லன் எனினும், ஒரு வினையின்கண் தான் செலுத்தும் வகைனய அறிந்துகொண்டு அதனை மேற்கொள்ளா விடத்து, தான் மேற்கொண்ட எல்லா வினைகளும் தனக்கு இழுக்கையே தரும் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

## 2. ON GOOD MANAGEMENT.

It's courage that counts as good rule
Absence will thwart efforts to pool.
Ev'n the able wise should weigh well
Or all his deeds will go to hell. 32.

To manage well is what is commonly known as good management. When that is not possible all attempts may lead to self destruction, Even if the able wise fail to weigh well what is taken up on hand, all deeds will miscarry. Know that the result will be dishonour.

## ३. மறநிலை.

மறமென்ப தொன்றின் மனவூக்கம் ; மற்றுங்
கறமென்ப அஃதோ டறிவுடைமை ; ஆன்ற
திறமென்ப மெய்முயற்சி ! தேரினவை மூன்றும்
புறமென்ப செய்யும் புகழ் ! 33.

பொழிப்பு : ஒருவர்க்கு ஒன்றின்மேற் கொண்ட மனத்தின் ஊக்கமே மறம் என்று சொலலப் பெறுவதாகும். மற்று, அந்த ஊக்கம் அறிவுடைமையோடு இயங்குதலையே அறம் என்று சொல்லுவர். இனி அதன்கண் உடல் முயற்சி சார்வதையே தன்னுடைய திறம் எனறு சொல்வர். ஆராய்ந்து கூறுவதானல் மன ஊககம், அறிவுத்திறன், உடல் முயற்சி ஆகிய இம்மூன்றையும் புற வாழ்க்கைககு உரியன எனறு கொள்வர்; இவையே ஒருவர்ககுப் புகழைத் தருவனவாகும்.

## 3, ON BRAVERY.

Enthused mind engenders courage ;
Right aid to it is through knowledge.
Bodily trials lead to skill.
To lead to fame these three sure will. 33.

The interest that one takes in any particular thing will lead to courage. When to this intelligent activity is added, right conduct ensues. When to that true bodily attempt is attached we have skill. These three combining will lead to fame in one's objective life.

## 4. புரத்தல் நிலை.

தன்னை மனைமகவைத் தம்போலும் தற்பிறரை
முன்னைக்குப் பின்னை முயன்றுயர்த்தி—மன்னியசீர்
நல்லரசு மன்பதைக்கு நாளும் நலம்புரக்கும்
வல்லாண்மை வாழி வழி ! 34.

பொழிப்பு : ஒருவன் தன்னையும், தன் மனைவி மக்களையும், அவர்களைப் போல் தன்னைச்சார்ந்த பிறரையும், முன் உள்ள நிலையை விடப் பின் உள்ள நிலைக்கு உயர்த்துதல் செய்து, நிலைபெற்று விளங்கும் சிறந்த நன்மை தரும் அரசுக்கும், மக்கள் கூட்டத்திற்கும், நாளும் நலஞ்செய்கின்ற வினைகளைப் போற்றிக் காக்கின்ற வலிந்த ஆண்மை வழிவழியாக வாழ்வதாகுக.

## 4. ON SAFEGUARD.

Self, wife, children, kith, kin to raise
Above last state trials shall size,
To aid rule and mankind fare well
May for long that manliness swell ! 34.

One shall so endeavour to do all that he can to raise and firmly establish self, wife, children and all near and dear ones to state higher than the last. That will be a safeguard to the government and the society. That able management which will ensure this will live for long.

## 5. தறுகண் நிலை.

அமைவுக் கமைந்தமையா ஆறல்லார்க் கார்ந்து
சமைவுக் குரன்காட்டும் சால்பும்—இமையாமல்
ஏர்ந்தடக்கும் ஓர்பும் இயல்பின் இழிந்தாரை
ஊர்ந்தடக்கும் வீறும் உரன்! 35.

பொழிப்பு: உலகியலுச்குப் பொருந்திய வினைகளுக்குத் தானும் பொருந்தியிருந்து, இயல்பு நிலைச்குப் பொருந்தாத வழியைப்பின் பற்ருத தன்மையர் வழித்தான் அறிவால் கிளர்ந்து நின்று, அத்தகைய இயல்பு நிலைகளை அவர்களிடத்து உருவாக்கும் தன்மையில், தன் உள்ள உரணைக் காட்டுகின்ற தகுதியுடன் அவ்வழியில் தான் அஞ்சுதலில்லாமல் அவர்தம் மிகைநிலைகளைக் கடிந்து திருத்துகின்ற கடைப்பிடியும், அவ்வாறு மாற்றற்கியலாமல் இயல்பாகவே விளைந்து நிற்கும் இழிந்த தன்மையரை மேற்சென்று அடக்குகின்ற வீறுண்மையுமே, சிறந்த வீரம் என்று சொல்லப்பெறும்.

## 5. ON VALOUR.

To move with the world and to stand
Against those who're not of the band
Spells courage to control the low,
To condemn excess is valour's glow. 35.

Be in tune with the natural activities of the world and move with it. Flare up and stand against these who do not move with the world. Be firm and move fearlessly and intelligently to make them turn round to move with the world, If however this be not possible and if the others too continue to be so and appear incorrigible, be bold to control the excess. That will redound to the glory of your valour.

# 8. பெண்மையியல்

## 1. நாண நிலை.

முகங்கவிக் தம் நாண்பெண்மை ஆண்மை முகக்கும்!
அகங்குமிழ்க்கும் இன்வாரி ஆழ்த்தும்—நுகங்கவிழ்த்த
ஏறன்றோ நாணவிழ்ந்த ஏர்த்தடங்கண் மங்கைதன்
சேறன்றோ ஆண்மைச் செருக்கு! 36.

பொழிப்பு: முகத்தைக் கவிழ்க்கச் செய்யும் நாணத்தை யுடைய பெண் தன்மையே ஆண்களைத் தன் வயப்படுத்துவதாகும். அதுவே உள்ளத்தை மலரச் செய்கின்ற இன்பக் கடலுள் மூழ்குவிக்கும். அத்தகைய நாணம் தவிர்ந்து, நிமிர்ந்து நோக்கும் பெரிய கண்களையுடைய பருவ மகளிர், தன் மேல் வைக்கப்பெறும் நுகத் தடியை அலைத்து விழ்க்கும் எருமைக் கடாவைப்போல் அடக்குதற் கரியர்; அத்தகையவர்களிடத்து, ஆண்களின் பெருமை, அவ்வெருமைக்கடா கிடந்து குழப்புகின்ற சேற்றைப்போல் மிதிபட்டுத் துவைந்து போகும் என்க.

# 8. ON WOMANHOOD.

## 1. ON MODESTY.

Shy womanhood makes face go low,
Attracts men, maks them joyous so.
Bold like bulls throwing off yoke
Makes men's pride as mire for their joke. 36.

Good woman's modesty makes them hang their head low. It is that which attracts men and makes their heart's blossom to be immersed in a sea of joy. Maids with the shyless, bold look are like the bulls that throw off the yoke placed on their neek and are hard to control. With them men's pride is more like the mire well trod over by the feet of the oxen.

## 2. அடக்க நிலை.

அடங்கல் இழுக்கன்றே ஆணுள் ஒழுக்கு!
தடங்கல் பெயர்த்தகற்றும் தண்டு—மடங்கலுளத்
தீத்தணிக்கும் நீர்மை! தெளிவார்க் கதுவன்றே
காத்தளிக்கும் பெண்மைக் கழல்! 37.

பொழிப்பு: பெண்கள் அடக்கத்துடன் இருப்பது இழுக்கு ஆகாது; அஃது ஆண்களை ஆள்கின்ற ஓர் ஒழுச்சபாகும். தங்கள் முன்னேற்றப் பாதைக்குக் குறுக்கீடாக நிற்கும் தடைக் கல்லைப் பெயர்த்தெறிகின்ற இருப்புத் தண்டு ஆகும் அது. அவ்வடக்கம், அரிமாவின் எழுச்சி பொருந்திய ஆண்மையுள்ளத்தின் தீயைத் தணிக்கின்ற சிறந்த ஒரு பண்பாகும். மனவியலை ஆராய்ந்து தெளிந்த பெண்டிர்க்கு அப்பண்புதான் தம் பெண்மைத் தன்மையைக் காத்து உலகுக்குத் தரும் வெற்றிக் கழலாகும்.

## 2. ON SELF CONTROL.

To control self is no disgrace
It's rod that moves stone in life's race.
Puts down lion's fire; to vision clear
No match for womanhood to wear. 37.

To be quiet and humble through self-control is no disgrace to a woman. It is a sort of regulation to rule men. It is the iron rod to root out and throw off the stone in the path of progress of man's life. It is a sort of culture to put down the fire of feeling in the lion's heart of men. For those women who have an analytical study of the mind, modesty is a symbol of victory to wear and there is nothing to equal it.

## ௩. அழகு நிலை.

ஒளிநுதல் விற்புருவம் ஊன்றுவிழி பொன்னூர்
நெளியிதழ் வேய்தோள் நெரிமுலைமட் டன்றே
களிதரும் அன்பார் கனிமொழியும் ஆண்மைக்
களிதரும் பெண்மை அழகு! 38.

பொழிப்பு: ஒளி பொருந்திய நெற்றியும், வில் போல் வளைந்த புருவங்களும், கூர்ந்து நோக்குகின்ற விழியும், பொன் னிறம் தோய்ந்து, முறுவல் பூக்கும் இதழ்களும், மூங்கில் போலும் வாளிப்பு நிறைந்த மென்தோளும், நெருங்கிப் புடைத்த முலைகளும் மட்டுமே அல்ல, ஆண்களுக்கு மயக்கத்தை யூட்டுகின்ற மகிழ்ச்சி தரும் அன்பு நிறைந்த கனிவான வாய்ச்சொல்லும், பெண்களுக்குச் சிறந்த அழகாகும்.

## 3. ON BEAUTY.

Bright forehead, fixed look, bow-brow,
Smiling lips, bamboo shoulders show
Buxom breast, fair words to charm men
These are what maiden's beauty's ken. 38.

Bright forehead, bow-like brow, golden smiling lips, bamboo like shoulders, buxom breast and sweet words to make men intoxicated with joy constitute what we recognize as beauty.

## 4. உடல் நல நிலை.

உடலம் உலகியலுக் கொண்கருவி என்றும்
கடனதை முன்னறிவாற் காத்தல்—கெடல்தொடரின்
அன்புகெடும் இன்புகெடும் ஆன்ற அறிவுகெடும்
என்புகெடும் எஞ்சா தெரிக்கு ! 39.

பொழிப்பு : உடல்தான் உலக வியக்கத்திற்கான சிறந்த கருவி. அதை முன்னறிவோடு நலிவின்றிக் காத்து கொள்ளுதலே எல்லார்க்கும் என்றும் தலைபாய கடமையாகும். அது கெடத் தொடங்குமானால், அதன்வழி அன்புணர்வும் இன்ப உணர்வும், நிறைந்து விளங்கிய அறிவுணர்வும் படிப்படியாகக் கெட்டுச் சீரழிவதல்லாமல், உடலின் உருவ நிலைக்கேதுவாகிய எலும்புக் கூட்டையும், இறுதிக்காலத்து எரிக்கின்ற தீயினுக்கும் எஞ்சுதல் இல்லாமல் கெடுத்துவிடும் என்க.

## 4. ON PHYSICAL HEALTH.

Good tool for the world is body.
To keep in health is prime duty.
Love pleasure, intellect and bone
Will fire consume if health is gone. 39.

For all activities of the world the body is needed as the most essential tool. To keep it in good health is our prime duty. When for any reason, it begins to rot, feelings of love, joy and intellect and the like will gradually deteriorate. Finally nothing of the bony structure that gives the body its shape will ramain when it is consumed by fire at the time of death.

## 5. அளவு நிலை.

எழலியங்கல் உண்ணல் எழிற்புனைதல் பேசல்
கழலாடல் ஈட்டல் கணித்தல்—விழலூடல்
மெய்யுறுதல் ஈனல் மேலோர் மிகைகடிதல்
ஐயாறும் வாழ்க்கைக் களவு. 40.

பொழிப்பு : வைகறையில் எழுதலும், மேற்கொள்ளும் வினைக்கண் இயங்குவதும், உண்பதும், தன்னைப் புனைந்துகொள்ளும் அழகு நிலைகளும், பிறருடன் பேசுகின்ற பேச்சும், ஓடியாடி விளையாடுதலும், பொருளீட்டத்தில் செய்கின்ற கணக்கு முறைகளும், நாளிறுதிக்கண் படுக்கையில் சாய்ந்து ஓய்வு கொள்ளுதலும், தன் கணவனோடு ஊடுதலும், உடலின்பம் துய்த்தலும், பிள்ளைகளைப் பெறுதலும், தனக்கு மேனிலையில் உற்றவர்கள் ஒரோவழித் தம் நிலையில் மிகைச் செல்வார்களாயின் அவர்களைக் கடிந்து கொள்ளுதலும் ஆகிய பன்னிரண்டு தன்மைகளும் பெண்டிர் தம் வாழ்க்கையில் அளவாகக் கடைப்பிடிக்கத் தக்கனவாகும்.

## 5. ON MODERATION.

Early moving. eating, dressing,
Talking playing, counting, feigning,
Giving joy child bearing, checking
Excess guards twelve will bring 40.

Rising up early, attending to daily routine, eating, dressing (clothes and hair) to look trim, talking to others, playing, accounting for earnings, resting in bed at the end of the day, feigning dislike with the husband, having bodily pleasure, bearing children, checking excess in the conduct of elders towards self-in all these twelve of the nature of safeguards a woman has to be within proper limits.

# நிறைவும் மறைவும்.

த. அன்பழகன்.

1

எந்த நிமையம் இறந்தாலும்
நிறைந்த நெஞ்சோ டிறந்திடுவேன்
எந்த வுலகம் புகுந்தாலும்
இறைவன் வழியென் றிமைகவிழ்ப்பேன். எந்த.

2

முந்து தமிழும் பிறந்துள்ளேன்
மூவா அமுதக் குறளருந்தி
நந்து மெய்ம்மை படிந்துள்ளேன்
நல்லார் பாதை நடந்துள்ளேன். எந்த.

3

அன்னை தந்தை யருளுடையேன்
ஆசிரி யர்தம் பொருளுடையேன்
என்னை மதித்து முகங்கலங்கும்
இகழா நண்பர் துணையுடையேன். எந்த.

4

என்னைத் தன்றுய் மதித்துயிர்க்கும்
பெண்ணொருத் திக்கு யானுரியன்
பின்னை வினைதம் உருவறியும்
பேறுடை யாருள் நானொருவன். எந்த.

5

அமுதம் வழிய நகைசெய்தும்
அகமார் மழலை உரைசெய்தும்
குமுத மலராய் மடிகுழையும்
குழந்தை இன்பம் நுகர்ந்துவிட்டேன். எந்த.

6

பழுதில் புலவர் இசையொழுகும்
பாடல் பருகும் வகையுணர்ந்தேன்
அழுதுள் புலம்பும் உள்ளமதை
அமைதிப் படுத்தும் தமிழுணர்ந்தேன். எந்த.

7

அகலா ஆசைப் பேயினையும்
அரவாய்ச் சினமாம் நாயினையும்
இகலும் பொறுமைத் தீயினையும்
இணைத்துள் அடக்கும் திறமுளதாய். எந்த.

8

அறியார் உதிர்க்கும் புன்சொல்லும்
அடைய முடியாப் பல்நுகர்வும்
நெறியார் வியக்கும் செயல்களையும்
மறவாத் தன்மை எனக்கிலையால். எந்த.

9

நன்று நினைந்து நலிந்ததன்றித்
தீமை அளைந்து மெலிந்ததில்லை
கொன்று விடுவார் பகைவரெனக்
குன்றும் அஞ்சல் எனக்கில்லை. எந்த.

10

வெவ்வே றிடங்கள் திரிந்தாலும்
விளைந்த உள்ளம் திரியவில்லை
ஒவ்வோர் நொடியும் துயர்வரினும்
ஒளிசேர் 'எதிர்வே' உளம்தெரியும். எந்த.

11

அன்புக் கண்கள் காண்கையிலும்
அறிவு மொழிகள் கேட்கையிலும்
இன்பம் மனத்துள் எழுந்திசைக்கும்
இயல்பில் பழகிப் போனதினால். எந்த.

12

இறவாக் குறளின் பெருமானும்
ஏசோ டறிவர் நபியேனும்
மறவாக் கணியன் பிடியுண்டு
மடிந்தார் எனநான் அறிந்ததினால். எந்த.

# உள்ளம் பேசுகின்றது!

உள்ளம் பேசுகின்றது!

பெருகியோடும் உணர்வு என்னை நெருப்பாய்ச் சுடுகின்றது. என் உடலில் ஓடும் குருதியில் வெப்பம் குமிழிவிடுகின்றது. நான் காணும் பொருள்களின் மேல் வீசும் அனல் காற்று அப் பொருள்களை எரித்துப் புகைத்து விடுமோ என்று கருது கின்றேன்.

நீர்ச்சுழலில் எதிர்ப்பாய்ந்தோடும் ஒரு மீன்போல் வாழ்க்கை நினைவில் என் உள்ளம் எதிர்த்தோடுகின்றது.

அன்று தோன்றி மறைந்த மக்கள் இனத்து முதல் மாந்தன் இன்று பிறந்தால்.....?

வாழ்க்கையில் உள்ள ஒளியும், ஒழுக்க உணர்வும், மெய்ம்மை நிகழ்வுகளும் மிகமிகத் தேவை என்று, அன்று பேசிய மெய்யுணர்வு அறிஞரும், அருளாளரும் தாங்கள் உறங்கும் அயர்ந்த துயிலினின்று எழுந்து இன்றைய உலகை நோக்குவாரானால்......?

நூல் நிலையங்களில் குவித்து வைத்துள்ள தூசி படிந்த கணக் கற்ற சுவடிகளில், வாடைக்கு நடுங்கும் ஒளி விளக்கிலும், கொல்லும் பசியொடும், வலிந்து அணைத்துக் கொண்ட வறுமையொடும், பாதையோரங்களிலும், சோலைகளிலும், ஒளி வராத இருட்டறைகளிலும், காற்று அசையாத மூலை முடுக்குகளிலும் இருந்து, எலும்பை எழுதுகோலாக்கிக் குருதியை மையாக்கித், தம் உடம்புத்தோலைத் தாளாக்கி, இந்த மக்கள் கூட்டம் உய்வதற்கான வழிகள் இவையிவை என்று தாம் கண்டனவற்றையும் கேட்டனவற்றையும் ஒன்று விடாமல் எழுதிப்போனார்களே, அந்த கலைஞரும், புலவரும், அறிஞரும், எழுந்து வந்து நாகரிக நாற்றமடிக் கும் வீதிகளில் உலவுவார்களானால்......?

ஏ, உள்ளமே! அவர் தம்மைக் காணவும் நடுங்குவாய்! அவர் வருகின்ற பாதைகளில் நீ நடந்து செல்லவும் அஞ்சுவாய்!

வானுயரப் பறக்கும் உன் நாகரிகக் கற்பனைகளுக்கும், மரங்களை மக்களாக்க அவர் கண்ட வாழ்வின் பேருண்மைகளுக்கும், எத்தனை வேற்றுமை மாற்றங்கள்!

பெண்களைத் தாய்களாகவும், தெய்வங்களாகவும் போற்றிய அவர் தூய்மை அன்பிற்குமுன், நீ அவர்தம் பெருமைக்கு

வித்திடுவதாகப் பேசும் கணக்கற்ற பேச்சுகள் நிலைகுலைந்து பொடிப் பொடியாய் மாய்ந்து போகும்!

உன் படிவ எண்ணங்களுக்கும், கற்பனைப் பேச்சிற்கும் அவர்தம் உண்மை விளக்கங்கள் இருள் மண்டிக்கிடக்கும் படுகுழிகளை முடிவெனக் காட்டி நகைக்கும்.

உள்ளமே, உணர்வின் வெள்ளமே!

காலையிலிருந்து மாலை வரை நீ உனக்கு எத்தனை நன்மைகளைச் செய்துகொண்டாய்! நீ மற்றவர்க்காகச் செய்தது என்னை?

உன் வாழ்வின் முழு நோக்கம் எதுவென்று கண்டு உன் கால்கள் நடையிடுகின்றனவா?

வாழ்வின் முதற் படியில் நீ கால் வைக்கும்போது, நீ அடையப் போகும் கடைசிப்படி, உன்னை எங்கு கொண்டுபோய் விடும் என்பதை நொடியாகினும் எண்ணினையா?

நீ காலெடுத்து வைத்த பக்கமெல்லாம் பூஞ்சோலையும், பசும் புற்றரையும் உன் மென்மையான அடிகளுக்கு இன்பமான நடை சேர்க்கும் என்று நீ எண்ணியிருந்தால் அதை உடனே மாற்றிக்கொள்.

பொருள் வருவாய் ஒன்றையே வாழ்வின் இலக்காகக்கொண்டு, மக்கள் விரும்புவனவற்றையும், விரும்பாதனவற்றையும் பேசிப் பேசிக் காற்று மண்டலத்தை பொய்ம்மை நாற்ற மடிக்கச் செய்யும் இன்றைய சீர்திருத்தக்காரரின் நோக்கும், போக்கும் உன்னை எங்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நீ உணர முடியாது.

சுற்றிலும் அறிவின் வியப்பான வளர்ச்சியை எண்ணி எண்ணி, நீ பூரித்துப்போவது, அடியில் கனல்கின்ற நெருப்பின் சூடு பட்டுப் பொங்கி வழியும் பாலை எனக்கு நினைவூட்டுகின்றது. வற்றக் காய்ந்து சுண்டிப் போகும் அதன் நிலை இரங்கத் தக்கது!

ஏ, உள்ளமே!

உன் அலைவுகள் பல!

உன் கோலங்கள் பல!

முன் நினைத்ததைப் பின்னால் விலக்குவாய்!

பின் நினைப்பதை முன்னால் வெறுத்திருப்பாய்!

வான் கிழிய ஓலமிடும் வான் கப்பலும், ஊர் கிழிய ஊசலிடும் புகை வண்டியும், வீதி கிழிய இரைந்து செல்லும் இன்னியங்கியும் உன்னை உயர்ந்தவனாக ஆக்கிவிட முடியாது.

பூச்சியினும், புழுவினும் பறவையினும், விலங்கினும் நீ விரைந்து போவதையும், விரைந்து உண்ணுவதையும், குதித்து மகிழ்வதையும் உன் முன்னேற்றம் என்று எண்ணிவிடாதே!

கண்ணுக்குப் புலனாகும் வளர்ச்சிப் பொருள்களின் எண்ணிக்கையின் அளவு உன் கருத்துகள் வளர்ந்திருக்கின்றனவா பார்!

அறிவு எட்டிப்பிடித்த நாகரிக முதிர்வை, உன் உணர்வு தொடுகின்றதா என்பதைப்பற்றி நீ மிகுவாக எண்ணல்வேண்டும்.

தீப்பந்தத்தை எடுத்துச் செல்லும் ஒருவன் தண்ணீரையும் உடன் கொண்டுபோவது நல்லது!

முந்திப் போகின்றவன் ஏறிய குதிரையின் கடிவாளம், பிந்தி இருப்பவனின் கையில் இருத்தலில் பயனில்லை.

அறிவின் மீது ஊர்ந்து செல்லும் உன் வாழ்க்கை, உள்ளத்தைப் புறக்கணிக்கக் கூடாது!

அறிவு நெருப்பு!

மிகினும் குறையினும் கேடு செய்யும்.

அறிவு மின்னல்!

ஊரையும் உலகையும் கொளுத்தலாம்.

அறிவு காற்று!

தென்றலாயும் புயலாயும் மாறலாம்.

ஏ, உள்ளமே!

சுழித்தோடும் அறிவுப் படகுக்கு உள்ளத்தின் துடுப்புகள் தேவை!

வாழ்க்கைச் சூறாவளியில், மாந்தரின் செலவு நொறுங்கிப் போகாமல், உள்ளமே, நீ வழியமைத்துக் கொடு.

நீ என் வாழ்வின் கை விளக்கு.

---

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் "கற்பனை ஊற்று" என்னும் நூலில் வெளியான முதற் கட்டுரை.]

# தமிழர் கொள்ள வேண்டுவன.

தமிழ் முன்னோர் தமது மொழியைப் பிற மொழிக் கலப்பின்றித் தூயதாய் எல்லாவளனும் நிரம்ப வளர்ந்து வழங்கி வந்தவாறு போல, இஞ்ஞான்றைத் தமிழரும் தமிழ் மொழியைத் தூயதாய் வானுற வளர்த்து வருதல்வேண்டும். ஒவ்வொரு மக்கட் குழுவினருந் தமது மொழியைத் தம் உயிரினுஞ் சிறந்ததாக வைத்துப் பேணி வருகையில், இஞ்ஞான்றைத் தமிழர் மட்டுந் தமிழ்மொழி யுணர்ச்சி சிறிதுமில்லாக் கயவர்களாய் இருக்கின்றனர் அவருள் அத்தி பூத்தாற்போல் தமிழ் கற்பார் சிலருந் தமது மொழிப் பெருமையை உணராமல், இறந்துபோன வடமொழிச் சொற்கள் சொற்றொடர்கள் கதைகளையும் நேற்றுண்டான நாகரிகமில்லா மொழிகளின் சொற்கள், சொற்பொருள் வழக்குகளையும், ஒரு வரை துறையின்றி எடுத்துத் தமிழிற் புகுத்தி அதனைப் பாழ்படுத்தி, அவற்றால் தம்மை அப் பிறமொழியாளர்க்கு அடிமைப் படுத்திக் கொள்ளுதலுடன், அவ் வடிமை வாழ்க்கையே தமக்கொரு பெருமை வாழ்க்கையாகயும் பிழைபட நினைந்து இறுமாந்து ஒழுகுகின்றனர். தன்னைப் பெற்ற தாயைக் கொல்லுந் தறுகணன் போலத் தன்னை அறிவு பெற வளர்த்துப் பெருமைப் படுத்திய தமிழைச் சீர்குலைக்கும் போலித் தமிழ்ப் புலவரைப் பின்பற்றி நடவாமல், தமிழை உள்ளன்புடன் ஓம்பித் தூயதாய் வழங்கும் உண்மைத் தமிழாசிரியர் தம்மைப் பின்பற்றி நடத்தலில் தமிழ் நன்மாணவர் அனைவரும் கருத்தா யிருத்தல்வேண்டும்.

தமிழரனைவரும் பண்டுபோல் தமக்கும் தம் இல்லங்களுக்கும் தம் ஊர்களுக்கும் பிறவற்றிற்கும் எல்லாம் தூய தமிழ்ப் பெயர்களையே அமைத்தல் வேண்டுமன்றி வடமொழி முதலான வேற்று மொழிச் சொற்களைப் பெயர்களாக அமைத்தல் ஆகாது.

இன்னுந் தமிழரெல்லாருந் தம்மைத் தமிழரென்றே வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். தம்மை ஆரியரென்றாவது, ஆரிய நூல்களில் வகுத்துச் சொல்லப்பட்ட, 'பிராமணர்', 'க்ஷத்திரியர்', 'வைசியர்', 'சூத்திரர்' என்றாவது சொல்லிக் கொள்ளலாகாது.

—மறைமலையடிகள்.

# தனிம வரிசை.

இல. க. இரத்தினவேல்,
அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி.
செய்யாறு-604407.

"எழுத்தெனப் படுப,
அகர முதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப."

தமிழில் உள்ள எழுத்துகள்—அஃதாவது வேறுவேறான தனி ஒலியன்கள் முப்பது. உலகில் உள்ள மொழிகள் அனைத்தையும் பகுத்து ஆய்ந்தாலும் தனி ஒலியன்கள் 90-க்கு மேல் இல்லை. இந்த வெறும் 90 ஒலியன்களைக் கொண்டு பல்லாயிரம் மொழிகளில் பல கோடிக் கணக்கான சொற்களை உருவாக்குகிறோம். ஆக, எல்லா வற்றுக்கும் அடிப்படையானவை 90 தனி ஒலியன்கள்தாம். இவற்றுள் தனி ஒலியன் ஒன்றுலோ அன்றி இரண்டு அல்லது சில வற்றை இணைப்பதாலோ தனித்தனிச் சொற்கள் உண்டாகின்றன. இங்ஙனமே உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் — பனிமலை முதல் பருக்கை வரை; அண்டக்கோளின் உண்டைப் பிறக்கம் முதல் நீங்கள் இப்போது படிக்கும் செய்தித்தாள் வரை அனைத்தும் உருவாவதற்கு அடிப்படையான தனிமங்கள் (Elements) ஏறத்தாழ 92 தான்! (நொடியளவில் நிலைத்திருக்கக்கூடிய செயற்கைத் தனிமங்களையும் சேர்த்துக் கொண்டால் எண்ணிக்கை 105 ஆகலாம்.) இந்தத் தனிமங்களில் ஒன்றோ பலவோ அவையவை இணையும் அளவுக்குத் தக்கவாறு பல்வேறு பொருள்கள் உருவாகின்றன.

தொன்முது பழங்காலத்தில்: 'ஒரு தனிப் பொருளின் அல்லது ஒரு சில தனிப் பொருள்களின் சேர்க்கையால்தான் எல்லாப் பொருள்களும் உருவாகியிருக்கும்' என்ற கருத்து, பழங்கால இயற்கை அறிவியலாளர்களிடம் நிலவி வந்தது. தமிழகத்தில் தொன்று தொட்டு வழங்கிவந்த கருத்தை 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்' கூறுகிறார்.

நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

—என்று. இதில் வளி என்பது காற்று; விசும்பு என்பது

வான். நிலம், தீ, நீர், காற்று. வான் — இவை ஐந்தும்தாம் உலகை உருவாக்கிய பொருள்கள் என்பது கருத்து. தொல்காப்பியரின் காலம் கி. மு. ஏழாம் நூற்றாண்டு.

இத்தகைய கருத்து, உலகின் வெவ்வேறு கண்டங்களில் வாழ்ந்த மக்கள் இடையிலும் வழங்கிவந்தது. கிரேக்க அறிஞரான தேல்சு (Thales) நீர் ஒன்றே அஃது ஆவியாவதிலும் குளிர்வதிலும் உலகின் அனைத்துப் பொருள்களையும் உருவாக்குகிறது எனக் கருதினார். ஆனால், ஈராக்கிளிட்டசு (Heraclitus) 'தீ' ஒன்றே அத்தகைய மூல முதல் தனிமம் எனக் கருதினார். கி. மு. 450-இல் வாழ்ந்த எம்பெடோக்ளசு (Empedocles) என்பவர்,

*"நிலம்,தீ நீர்,வளி நான்கும் உலகை*
*உருவாக் கும்தனித் தனிமங்கள் ஆகும்"*

என்றார்.

இவருடைய கருத்துத்தான் அரிசுடாட்டில் கொள்கையைப் போல் சிறிதும் மறுப்புக்கு இடம் இல்லாமல் பன்னூறு ஆண்டுகளாக உலகை ஆட்டிப் படைத்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், இன்றைய அறிவியல் ஆராய்ச்சியின்படி இவற்றுள் ஒன்று கூடத் தனித் தனிமமாய் இருந்ததில்லை. நிலமோ, பல்வேறு வகையான கூட்டுப் பொருள்களைத் தன்னுட்கொண்டது; இடத்துக்கு இடம் மாறுபடக் கூடியது. தீயோ எரிபொருளையும், பல எரிவளிகளையும் உள்ளடக்கியது. நீர், உயிரியை (Oxygen) நீரியை (Hydrogen) என்ற இரு வளிகளாகப் பகுக்கப்படக்கூடியது. காற்று பல தனித்தனி வளிமங்களை (Gases)க் கொண்ட கலவை. வான் என்பதோ ஒரு 'கானல் நீர்' அன்றி வேறன்று.

குறியீடு (Symbol): இந்த முதல் நான்கு "தனிமங்களுக்கு"க் குறியீடுகள் கூடக் கொடுக்கப்பட்டிருந்தன. தனிமம் ஒவ்வொன்றும் தனித்தனிக் குறியீட்டால் எழுதப்படுவதை நாம் அறிவோம். செம்பு (Copper) க்கான குறியீடு Cu. Cuprum என்ற செம்புக்கான இலத்தீன் சொல்லின் முதல் இரு எழுத்துகளே இன்றைய குறியீடு ஆகும். இக் குறியீட்டு மொழி பழங்காலத்திலும் வழங்கி வந்தது.




தனிமம் என்பது தான் என்ன? ஏறத்தாழ ஒரு நூறு தனிமங்களால்தாம் உலகமும் அதில் உள்ள எல்லாப் பொருள்களும்—ஏன் அண்டம் (Universe) அனைத்தும்—உருவாகி யிருப்பதாகக் கூறுகிறோம். இந்த அடிப்படைப் பொருளான தனிமம் (Element) என்பதுதான் எது? அஃதாவது இயைபியல் முறைகளால் (Chemical methods) மேலும் பகுக்கப்பட இயலாத தனிப் பொருளே தனிமம் ஆகும். இன்னும் சற்று உயர்வாக, இயை பியல் வழக்கில் (Chemical language) கூறுவதாயின் தனிமம் என்பது ஒரே அணுவெண் (Atomic number) உள்ள அணுக் களால் மட்டும் அமைந்த பொருள் ஆகும். இது, எப்பொருளுக்கும் முதற் பொருளாய்—மூலப்பொருளாய் விளங்குவதால் மூலகம் என்றும் வழங்கப்பெறும்.

மேற்கோளாக ஒரு பித்தளைத் துண்டை எடுத்துக்கொள்ளலாம். பித்தளையைப் பல இயைபியல் முறைகளுக்கு உட்படுத்தி, அதில் உள்ள நாகத்தை (Zinc) நீக்கிவிடலாம். மீதம் உள்ளது செம்பு இந்தச் செம்பை எந்த வகையான இயைபியல் முறைகளுக்கு உட் படுத்திச் சிதைத்தாலும் அது செம்பாகவேதான் இருக்கும். மேலும் பகுக்கப்பட இயலாது. தனிப்பொருளான இதனை ஒரு தனிமம் என்கிறோம்.

தனிமத்தைப் பற்றிய ஒரு கருத்து நமக்கு உருவாகிவிட்டது. இனி இந்தத் தனிமங்களைக் கண்டு பிடித்தது; பெயர் சூட்டியது; வகைப்படுத்தியது முதலியவற்றைப் படிப்படியாகத் தெரிந்து கொள்ளலாம். இதன் அறிவியல் வரலாறு சுவைமிக்கதும், திருப்பு முனைகள் கொண்டதுமான இனிய தொடரோவியம் ஆகும்.

*  *  *

## தனிம வரிசை :

### தொன்மை மிக்க மாழைகள் (Ancient metals) :

*"பொன்னும் வெள்ளியும் செம்பும் இரும்பும்*
*அன்ன ஈயமும் ஐவகை உலோகம்."*
*—சேந்தன் திவாகரம் 6 : 2.*

வெறும் கற்களையே கருவிகளாகப் பயன்படுத்தி அலுத்துச் சலித்த (வரலாற்றுக்கு முந்திய கற்கால) மாந்தன், தனக்குத் தேவையான கருவிகளை வடிவமைக்க இயலும் வன்மையான பொருள்களை நாடினான். இயற்கையன்னையின் மடியில் மழமழப்பு உள்ள ஒரு பொருள் அவனுக்குக் கிடைத்தது. மழமழப்புடையதால் அது மாழை (Metal அல்லது உலோகம்) எனப்பட்டது.

*"மாழை சுவணம் வங்காரம் தகணை*
*ஆடகம் உலோகக் கட்டி ஆகும்."*
*—பிங்கலந்தை 6 : 4; 1243:*

அந்த மாழை 'செக்கச் செவேர்' என்று இருந்ததால் வேறு படுத்துவதற்காக அது பின்னர்ச் செம்பொன் என வழங்கப்பட்டது. அதுவே செம்பு ஆயிற்று. பொன் என்பது மழமழப்பாய்ப் பொலிந்து தோன்றும் மாழைக்கான மற்றொரு பெயர். செந்நிற மாழை செம்பொன் தானே !

கி. மு. 8000 ஆண்டுகளுக்கு முன்னரே மாந்தன் அறிந்த மாழை செம்புதான். பின்னர் அறிந்தவை தங்கம், வெள்ளி, ஈயம். வெளியம் ('வெள்ளீயம்'-Tin) இரும்பு முதலானவை. 'சாரகா'வில் வரும்,

*"தங்கமும் அந்த ஐந்து தக்கமா ழைகள் ஆன*
*வெள்ளிசெம்(பு) ஈயம் மின்னும் வெளியத்தோ(டு)*
*[இரும்பு தம்மை"*

என்னும் பாவிலிருந்து, இந்த மாழைகள் வேத காலத்து இந்தியாவிலும் பழக்கத்தில் இருந்ததை உணரலாம். இவை தனிம நிலையிலும் கிடைத்தன.

(தொடரும்)

''தொண்டுசெய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெழுந்தே''—பாரதிதாசன்.

# தனித்தமிழ் இலக்கியக் கழகம்,
# திருநெல்வேலி-2.

பதிவு எண் 9/1968.

## கல்லூரிக் கட்டுரைப் போட்டி.

கற்கின்ற இருபாலீர்!

கவின்மிகு தமிழ்ப்பண்பீர்!

நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக் கழகம் எளிய இனிய தமிழைத் தமிழாக வழங்கும் எழுச்சி நிறை குறிக்கோளுடன் கடந்த பதினாறு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது; கல்லூரி மாணவர் தம் எழுத்தாற்றலையும், பேச்சாற்றலையும் ஏற்றமுறச் செய்யும் வகையில் போட்டிகளை முறையாக நடத்திப் பரிசளித்துப் பாராட்டுகிறது. புலவர் தேர்வு எழுதுவோர்க்கு மாலை நேரக் கல்லூரி நடத்துகிறது. திங்கள் தோறும் இலக்கியக் கூட்டங்களை ஏற்பாடு செய்து கருத்து விருந்து தருகிறது. ஆண்டுதோறும் ஆய்வு நூல்கள் வெளியிட விழைகிறது.

மாணவர் தம் இலக்கிய ஈடுபாட்டினையும் ஆய்வு நோக்கினையும் ஆழ்ந்து உன்னும் திறனையும் வளர்க்கும் பெரு விருப்புடன் பத்து ஆண்டுகளாக ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியினை நடத்துகின்றோம். முதல் தகுதிபெறும் எழுத்தோவியத்தை உருவாக்கும் மாணவமணிக்குத் தனிப் பரிசாக உருபா நூற்றைம்பது மதிப்புடைய தங்கப் பதக்கமும் அவர் பயிலும் கல்லூரிக்கு உருபா ஆயிரத்து ஐந்நூறு மதிப்புடைய ''கொடை வள்ளல்'' த. பி. சோ. அரிராம் சேட்டு நினைவுச் சுழற்கோப்பையும் வழங்குகிறோம்.

இவ்வாண்டுக்குரிய ஆய்வுப்பொருள்:

### ''மேதை வேதநாயகரின் தமிழ்ப்பணி''

போட்டி நெறிமுறைகள்:

1. தமிழகத்தின் நாற்பெரும் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆண்-பெண் ஆகிய இரு பாலரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தோவியம் முழு வெள்ளைத் தாளில் ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமலும் அறுபது பக்கங்களுக்கு மிகாமலும் அமையவேண்டும்; மேற்கோள் நூற் பட்டியல் இறுதியில் இடம் பெறவேண்டும்.

3. நூற்றைம்பதாவது ஆண்டு விழாவுக்குரிய மயிலாடுதுறை மேதை வேதநாயகரின் நெடுங்கதை, இசைத் துறை, சட்டத்தமிழ், பெண் கல்வி ஆகிய பல்வேறு தமிழ்ப்பணிகளையும் குறிப்பிடவேண்டும்.

4. ஆய்வுக் கட்டுரையினை மாணவர் எழுதியதற்கான உறுதி மொழியினை அவர் பயிலும் கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்ப் பேராசிரியர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

5. தனித்தாளில் மாணவர் பெயர், பயிலும் வகுப்பு, கல்லூரிப் பெயர், இல்ல முகவரி ஆகியவற்றைக் குறித்து அறிவித்திடவேண்டும்.

6. ஆராய்ச்சிக் கட்டுரை வந்து சேருவதற்குரிய இறுதி நாள் 30—11—1976.

7. கருத்தோவியங்களை அனுப்பவேண்டிய முகவரி:

புலவர். பா. வளன் அரசு, க.மு.
தலைவர், தனித்தமிழ் இலக்கியக் கழகம்,
12-ஆ கிருட்டிணன் கோயில் வடக்குத் தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002.

8. சிறப்பு வாய்ந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதற் பரிசுக்குரிய எழுத்தோவியம் தீட்டுபவருக்குத் தங்கப் பதக்கமும், அவர் பயிலும் கல்லூரிக்கு வெள்ளி உருள் கலனும் அளிக்கப்படும். இரண்டாவது மூன்றுவது பரிசுகளாக முறையே உருபா முப்பது, இருபது மதிப்புள்ள தமிழ் நூல்கள் தரப்பெறும்.

9. பரிசுகள் 30—1—1977 ஞாயிறு மாலையில் நெல்லையில் நிகழும் தமிழ்த் திருவிழாவில் வழங்கப்படும்.

10. வெற்றி வாகை சூடும் மாணவர் உருள்கலனைப் பெற்றுச் செல்வதற்குத் தாம் பயிலும் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிமைச்சீட்டு வாங்கி வரவேண்டும்.

11. பரிசாகப் பெற்றுச் செல்லும் உருள்கலனை மாணவர் சார்ந்த கல்லூரி முதல்வர் அவர்கள் தனித்தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் முகவரிக்கு 14—1—1978-க்குள் அனுப்பித் தருவது பொறுப்பாகும்.

12. பரிசு பெறும் கட்டுரைகளை வெளியிடும் முதல் உரிமை கழகத்தையே சாரும்.

13. போட்டி முடிவுகள் நாளிதழ்களில் வெளியிடப்படும்.

ஆர்வத்துடன் மாணவர் தம் எழுத்துரத்தையும் எண்ணத் திறத்தையும் நன்முறையில் வளர்த்திடத் துணையும் தூண்டுதலும் நல்குமாறு கல்லூரி முதல்வர் பெருமக்களையும் பேராசிரியப் பெருந் தகைஞரையும் அன்புடன் விரும்பி வேண்டுகிறோம்.

புலவர். பா. வளன் அரசு.
தலைவர்.

புலவர். இரா. முருகேசன் பிரான்சிசு.
பொருளாளர்.

புலவர் சூ ம. ஞானதாசு.
செயலாளா.


# "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 12 உருபா | 24 உருபா | 24 உருபா. |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 12 ,, | 12 ,, |
| தனியிதழ் : | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

# நம்மினம் ......!

— மறைமலையடியுறை —

நம்மினம் — நாயினம் !
நமக்குள் மட்டுமே, நன்றி காட்டிலாப்
பேயினம் !

நம்மினம் — பேயினம் !
நம்ம ஞேரையே, நூக்கி நுறுக்கிடும்
கேடினம் !

நம்மினம் — கேடினம் !
ஆக்கம் யாவுமே, போக்கும், போக்கிலா
வேம்பினம் !

நம்மினம் — வேம்பினம் !
நம்மோன் உயர்வையே, நாளும் நினைந்(து) அதைப்
போழினம் !

நம்மினம் — போழினம் !
நாடும் ஒற்றுமை, நேரா வா(று) உளம்
சூழினம் !

நம்மினம் — சூழினம் !
நேரும் அறிவிஞர், நூறு கோடியர்
சேரினம் !

நம்மினம் — சேறினம் !
நூறு கோடியர் நட்ட விதைப்பையும்
தூரினம் !

நம்மினம் — தூறினம் !
நட்ட விதைப்பொரு நுனியுந் துளிர்க்கொணுப்
பூழினம் !

நம்மினம் — பூழினம் !
நெட்டும் நேரலர், குட்டக் குமைந்திடும்
கூழினம் !

நம்மினம் — கூழினம் !
நக்கும் எச்சிலே, நத்திக் குரைத்திடும்
நோயினம் — தமிழினம் ! —அமிழினம் !

---

*நூக்கி நுறுக்குதல்-வீழ்த்தி நொறுக்குதல் ; போழினம்-பிளக்கும் இனம் ; தூரினம்-தூர்த்து விடும் இனம் ; தூறினம்-செத்தை இனம் ; பூழினம்-புழுதி இனம் ; நெட்டும்-நெட்டித் தள்ளும் ; நேரலர்-பகைவர் ; கூழினம்-நசிந்த இனம்.*

முல்லை! இவ் வீட்டிற்கு வந்தின் றேடு
முத்திங்க ளானாலும்; உனக்கி ருக்கும்
தொல்லையினை அறியேன்;உன் கணவர் உன்னைத்
தீண்டாத மென்மலராய் வைப்பார் என்றும்,
எல்லையிலாத் துன்பம்நீ அடைவாய் என்றும்
எள்ளளவும் எண்ணவில்லை! நேற்று மாலைக்
கொல்லைக்கு நான்வர,நீ மறைந்து நின்றே
கொடுத்ததுவும் கடிதமென்றே அறிய வில்லை!

காலையில்நான் அலுவலகம் செல்லும் போது
கதவிடுக்கில் விழிசெலுத்தி முறுவல் பூப்பதும்
மாலையில்நீ குழல்முடித்துப் பின்னல் தொங்க
மல்லிகைப்பூச் சரத்தையதில் வைத்து வப்பதும்,
சேலையினை வகைவகையாய் வேளைக் கொன்றாய்ச்
சிற்றிடையில் ஏற்றியெனைக் கண்டு வப்பதும்,
ஓலையினைப் படித்துணர்ந்தேன்! 'உன்றன் செய்கை
ஒவ்வொன்றும் எனக்கேதான்' என்னும் உண்மை!

"மேவலுறும் மலரென்னைத் தீண்ட வில்லை!
மீட்டுகின்ற புலவனில்லா வீணை யானேன்;
ஆவலுறும் நெஞ்சினுக்கே அமுது வார்க்கும்
அருந்திறனை முதல்மனைவி வாங்கிக் கொண்டாள்!
நோவலுறு தென்னையொரு கனியாய்ப் பூவாய்
நினைத்தெவரும் தீண்டாமல் இருக்க வேண்டிக்
காவலுறு கின்றார்என் கணவர்" என்றே
கடிதத்திற் குறித்திருந்தாய்! கண்ணீர் விட்டேன்!

"தள்ளாத பருவமில்லை அவர்க்கும்; என்றும்
தணியாத ஆவலுக்கு வேலி போட்டுக்
கொள்ளாத நிலையெனக்கும்! என்ன செய்வேன்?
குணக்குன்றே அவரென்பேன்! ஆனால் என்ன?
கிள்ளாத மென்மலராய் உள்ளேன்! உள்ளம்
கிளத்தாத மொழியில்லை! வழியு மில்லை!
உள்ளாத நாளில்லை! உயிரை மாய்க்க
உறுதிபூண் டேன்"என்றாய்; முல்லை! வேண்டாம்!

உன்போல வேநானும்! கடந்த ஆண்டில்
ஒருத்தியினைக் கைப்பிடித்தேன்! ஒருதிங் கட்குள்

முன்போல எனைத்தனியே ஆக்கி விட்டே
    முடிக்கொண் டாள்விழியை; நோய்வாய்ப் பட்டே!
அன்போ, அன்றேல் அதனின் இன்ப ஊற்றோ
    அறியவில்லை இன்றுவரை! ஆனால் முல்லை
உன்பாலொன் றுரைக்கின்றேன்; நீயும் நானும்
    ஒட்டுமாங் கன்றிணைப்போல் வாழ்ந்தா லென்ன?

எனைப்பிணைந் திருந்தகொடி இறந்த துன்னை,
    ஏற்றிருக்கும் கொம்போசெல் லரித்த கொம்பு!
உனைப்பிணைய வைத்ததிக் கொடுமை மக்கள்!
    உனக்கதுவே முடிவென்றும் பொய்மை பேசும்;
வினைப்பயனே நீபெறுவ தென்றும் கூறும்!
    வேருக நீதியினை எனக்குச் சொல்லும்
கனைப்புகளுக் கஞ்சாதே! "ஒப்பி விட்டேன்;
    கவலையில்லை" என்றெனக்குக் கடிதம் தீட்டு!


[redacted]

P/I, முதல்தெரு, சீத்தம்மா குடியிருப்பு,
சென்னை-600018.

# காவிரித் தாய்!

பூவிரித்தாய் ; வண்ணப் பொழில்விரித்தாய் ; தென்னைதேன்
மாவிரித்தாய் ; வாழை பலாவிரித்தாய் — நாவரிக்கப்
பாவிரித்தேன் பண்டைப் புகழ்பாடும் வண்டினஞ்சூழ்
காவிரித்தாய் காவிரித்தாய் என்று.

நீர்பெருக்கிப் பச்சை நிலம்பெருக்கி 'அச்சா'கும்
ஏர்பெருக்கி நெல்லோ டுயிர்பெருக்கி — ஊர்பெருக்கிப்
பார்பெருக்கிப் பண்டைப் புலவரெலாம் பாப்பெருக்கப்
பேர்பெருக்கிக் கொண்டாய் பெரிது.

கெண்டை புரளக் கிளர்த்தெழுந்த நெற்பயிரைக்
கொண்டை மலர்முடிக் கொண்டிருக்கும் — பெண்டிரெலாம்
வாரிச் சுருட்டுகையில் "வாழ்வீர் தமிழரெ"ன்று
நீரிற் சுருட்டுவையோர் பாட்டு.

நீர்க்குவளை சேர்ந்துவரும் நெற்பயிரோ டின்னெலிசெய்
தார்க்குவளைப் பெண்டிர் அகமகிழ — கார்குழுமிப்
பாடல்செய் தேத்துமுன்றன் பக்கலுள்ள மஞ்ஞையினம்
ஆடல்செய் தேத்துமுன் அன்பு.

கன்னல் அளித்தும் கனியளித்தும் வான்தோயும்
தென்னை அளித்துந் தேன்கதலி — தன்னோடே
உன்னை அளித்தும் உயிரளித்தும் வந்தாய்நீ
என்னை அளியோ விது.

கிளிகொஞ்சும் ; வெள்ளைக் கிடைநாரை துஞ்சும் ;
அளிகெஞ்சும் ; அம்மலர்த்தேன் சிந்தும் — இளிசேர்கண்
மந்தி மரம்பாயும் ; மன்னுதமிழ்த் தொல்பெருமை
குந்திக் குயில்கூவுங் கோடு.

மேடுகளை நீக்கி மிகத்தாழ் நிலன்நோக்கி
ஓடுவதேன் ? உன்றன் உளச்சிறப்பைப் — பாடுவன்கேள் !
மேலைக் குடியெனபோர் மேவாரோ ? மேவுவரோ
ஓலைக் குடிலோர் உனக்கு ?

காப்பதுபோற் காட்டிப்பின் கங்கையோ பல்லுயிரை
மாய்ப்பதுபோ லல்லாமல் மக்களினம் — பூப்பதிலுன்
வெள்ளப் பெருக்கை விரிக்கின்றாய் ; உன்பெருமை
உள்ளப் பெருக்கிற்கோர் ஊற்று.

ஊர்வளமை காட்டும் உயர்மதுரை ! நாகரிகச்
சீர்வளமை காட்டும் செறிநூல்கள் — நேரில்லாப்
போர்வலிமை காட்டும் பொருதோள்கள் ; இந்நாட்டின்
நீர்வளமை காட்டுவைநீ நின்று.

# மெய்யுணர்வாளன்.

மாற்றத்திற்கும் அழிவுக்கும் உட்படாமல் நிலையாயுள்ள மெய்ப்பொருள் எதுவோ அதனை அறியவேண்டும். அதற்கான கல்விப் பயிற்சி பெறவேண்டும் என்பதிலே ஆவலுடையவன் மெய்யுணர்வாளன். அவன் அதில் ஒரு பகுதியைக்கூடத் தெரிந்துகொள்ளாது விட்டுவிடாமல் அந்த மெய்ப்பொருள் முழுவதையும் அறியவேண்டுமென்று ஆவல் கொள்வான். உண்மையைக் கடைப்பிடிக்கின்ற தன்மை இவனிடம் இயற்கையாகவே அமைந்திருக்கும். எது பொய்யோ அதை இவன் மனமறிந்து ஏற்றுக்கொள்ளமாட்டான். அதை அப்படி ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதோடு வெறுக்கவும் செய்வான். மனத்திற்கு ஏற்படக்கூடிய இன்பத்தைத்தான் ஒரு மெய்யுணர்வாளன் தலையாகக் கருதுவானே தவிர புலன்கட்கு உண்டாகக்கூடிய இன்பத்தைப் பெரிதாகக் கருதமாட்டான். அவன் எப்பொழுதும் அமைதியாகவே இருப்பான். எந்தப் பொருளையும் தனதாக்கிக்கொள்ள விரும்பமாட்டான். எந்த நோக்கங்களுக்காக மக்கள் பணத்தைத் தேடுகின்றார்களோ அல்லது செலவழிக்கிறார்களோ அந்த நோக்கங்களின்மீது அவன் மனம் செல்லாது. ஒரு மெய்யுணர்வாளன் பயனற்ற செயல்களில் தன் கருத்தைச் செலுத்துவதில்லை. மாந்தத் தன்மையை முழுமையாகக் காணவேண்டுமென்ற ஆவல், நோக்கம் உடையவன். அவன் எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கருதுகிறான். இறப்பைக் கண்டு அஞ்சமாட்டான்.

மிகுதியான நினைவாற்றல், விரைவாகக் கற்றுணரும் திறன் உயர்ந்த மனப்பான்மை, எளிய தன்மை, வாய்மை, அறம், மறம், அமைதி ஆகிய இவற்றிடத்தில், உறுதியான பற்றுக்கொண்டவன் தான் மெய்யுணர்வாளனாக இருக்கமுடியும். அவன் தன்னுடைய நாட்டில் பெருமை செய்யப்படுவதில்லை. பொதுவாகவே உலக நடத்தைகளைப் பொறுத்தமட்டில் மெய்யறிவாளன் பயனுடையவனாயிருப்பதில்லை. அது அவனுடைய குற்றமன்று. இவனைச்சரியாக

---

*[முன் பக்கத் தொடர்ச்சி.]*

*வான்வறக்கு மென்றாலும் வண்மையிலே மேன்மேலுந்*
*தான்சுரக்குந் தண்டமிழ்த்தாய்க் காவிரியே — தேன்சுரக்கும்*
*செந்தமிழின் நன்னாட்டுச் சீரே; செழிக்கவைக்க*
*வந்தமர்ந்த வேலையே வாழ்த்து.*

---

*[இப்பாடல் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் இயற்றப்பெற்று, முன்பு 'தென்றல்' இதழில் வெளிவந்தது.]*

பயன்படுத்திக் கொள்ளாமலிருக்கிறுர்களே அவர்தம் குற்றமாகும். அதனுல் மெய்யறிவாளரில் பெரும்பாலோர் இழிந்தவராகக் கருதப் படுகின்றனர். சிறுபாலோர் பயனற்றவர்களாகக் கருதப்படுகின் றனர். மெய்யறிவாளனுடைய நற்குணங்களே அவனே இழிநிலைக் குக் கொண்டு வந்து விடுகின்றன. சரியான சூழலில்லாமற்போனுல் கெட்டதைவிட நல்லதுதான் அதிகமாகச் சீரழிந்து போகின்றது.

மெய்யுணர்வாளன் தீய சூழல்களின் இடையில் இருக்கமுடியாத வனுகி ஒதுக்குப் புறமாக இருந்து வாழ்க்கை நடத்துகின்ருன். பெரும்பாலான மக்களின் பைத்தியக்காரத் தனத்தையும், மற்ற அரசியல் நடவடிக்கைகளின் இழிதகையையும் இவன் எளிதாகப் பார்க்கிருன். நேர்மைக்காகப் பாடுபட வேண்டுமென்று இவன் பெரிதும் முயற்சி செய்வதால் இவனுக்குத்துணையாக எவரும் இருப்ப தில்லை. கொடிய விலங்குகள் வாழும் நாட்டிலே அகப்பட்டுக் கொண்ட மாந்தனைப்போல் இவன் நிலைமை இருக்கின்றது. மற்றவ ருடைய நேர்மையற்ற செயல்களில் இவனுல் பங்குகொள்ள முடிவ தில்லை. அவர் தமை எதிர்த்துப் போராடக்கூடிய வன்மையும் இவனுக்கு இருப்பதில்லை. ஏனென்ருல் எல்லாருமே காட்டு விலங்கு களா யிருக்கும்பொழுது இவன் தனியே இருந்து என்ன செய்ய முடியும்? தன்னுடைய நாட்டிற்கோ அல்லது தனக்கோ, தன் னுடைய நண்பர்களுக்கோ ஏதேனும் நன்மை செய்வதற்கு முன்ன ரேயே இவன் தன் உயிரை இழந்துவிடவேண்டியவனு யிருக்கிருன். இதனுல் இவன் தனக்காகட்டும், உலகத்திற்காகட்டும் பயனற்றவ னுகப் போய்விடுகிருன். இவற்றையெல்லாம் எண்ணித்தான் இவன் மன அமைதியுடன் தன்னுடைய வேலையில் மட்டும் நாட்டங் கொண்டு செல்கிருன்.

மண் காற்றடிக்கின்றபொழுது எப்படி ஒருவன் சுவருக்குப் பின் புறமாக ஒதுங்கிக் கொள்வானே அதைப்போல் இவன் ஒதுங்கி யிருந்து வாழ்க்கை நடத்துகிருன். மற்றவர்களுடைய நேர்மையற்ற செயல்களை இவன் நன்ருகப் பார்க்கிருன். அச்செயல்களின் கறை தன் மீது படாமல் தன் வாழ்க்கை நடைபெற்றுவிட்டால் அஃ தொன்றே போதும் என்று இவன் கருதி அதன் வழியே நடந்து இறுதியில் மன நிறைவோடு இவ்வுலகத்தினின்றும் அகன்று விடுகின்ருன்.

— சாக்ரடீசு.

# தமிழ் நெஞ்சம்!

வானூர்ந்த பள்ளிகளில் கல்லூரி தம்மில்
    வளர்கல்வி பயில்கின்ற இளைஞர்எல் லார்க்கும்
தேனூர்ந்த செந்தமிழ்மேற் பற்றில்லை; முன்னோர்
    தேக்கிவைத்த நூல்களிலே ஈடுபா டில்லை;
கூனூர்ந்த மென்முதுகும், பொலிவிழந்த தோளும்
    குழிவிழுந்த விழிகளிலே ஒளியிழந்த நோக்கும்,
ஊனூர்ந்த பருவுடலும் வாய்ந்திருக்கக் கண்டேன்;
    உளங்கவன்றேன். அவர்நெஞ்சில் தமிழில்லை யன்றோ?
படிக்கின்ற மங்கையர்க்கும் முகத்திலொளி இல்லை;
    பழகுகின்ற செயல்களிலும் செந்தமிழ்ப்பண் பில்லை;
துடிக்கொன்றும் இடையில்லை; பருத்துள்ள தூண்கள்!
    தோள்களிலும் அழகில்லை; வலிவில்லை; சூம்பல்!
நடிக்கின்ற பொய்யன்பு; நாகரிகப் போலி!
    நலிந்தவுடல்; இல்லறத்தில் நாட்டமிலாப் போக்கு!
கடிக்கின்ற உரையாடல் வாய்ந்திருக்கக் கண்டேன்;
    கவல்கின்றேன்; அவர் நெஞ்சில் தமிழில்லை யன்றோ?
கற்கின்ற காளையர்க்கும் கன்னியர்க்கும் இக்கால்
    கல்வியிலே பிடிப்பில்லை; அறிவிலில்லை ஆர்வம்;
சொற்குன்றும் மொழிகளிலே சோர்வுபடப் பேசிச்
    சோற்றுக்கு வாழ்வமைப்பார்! உள்ளநலங் காணார்!
விற்கின்றார் மொழிமானம்; தன் மானம்; விற்றே
    விழலுக்கு நீர்பாய்ச்சி வீழ்ந்திறந்து போவார்!
பொற்குன்றம் பொடிமணலாச் சிதறுண்டு போகும்
    பொருட்டென்ன? அவர்நெஞ்சில் தமிழில்லை அன்றோ?
வல்லடிமை இனித்ததென்ன? மெய்புளித்த தென்ன?
    வாங்கியுண்ணும் கைச்சோறிங் குயர்ந்ததென்ன? வாழ்வில்
மல்லடிமைப் பட்டதென்ன? அறம்மறந்த தென்ன?
    மானமெனும் உயர்உணர்வும் அற்றதென்ன? உள்ளம்
புல்லடிக்கும் கீழடியாய்த் தாழ்ந்ததென்ன? பெண்டிர்
    பொற்பிழந்து போனதென்ன? உயிர்ப்பழிந்த தென்ன?
சொல்லடிமைப் பட்டதன்றோ? மொழியடிமைப் பட்ட
    சோர்வன்றோ? அவர்நெஞ்சில் தமிழில்லை அன்றோ?

வளர்ந்துவரும் இளையோர்க்கும் மங்கையர்க்கும் நெஞ்ச
வளங்கொழிக்கும் அறஞ்சான்ற தமிழ்க்கல்வி வாய்ந்தால்
தளர்ந்துவரும் உடல்களிலே வீறுவரும; தோளில்
தாவிவரும் பூரிப்பு; முகத்திலொளி மின்னும் !
கிளர்ந்துவரும் மெய்யன்பு; கீண்டியெழும் பண்பு !
கிளர்த்துகின்ற உரைகளெலாம் தேன்சுவையை விஞ்சும் !
வளர்ந்துவரும் உளத்தூய்மை! விளைந்துவரும் வாய்மை !
வினைகளிலும் அஞ்சாமை நேர்மைவரு மன்றோ ?
தமிழர்க்குத் தமிழ்நெஞ்சம் வாய்ந்துவிடு மாயின்
தமிழ்க்குருதி ஊற்றெடுக்கும்; தமிழுணர்வு வீறும் !
உமிழ்கின்ற வல்லடிமை மொழியடிமை சாகும் !
ஊக்கமிகும்! தாக்கவரும் பகைதூளாய்ப் போகும் .
அமிழ்தூற்றுச் சுனை சுரக்கும்; அன்புமனம் பூக்கும்.
அமைதியெழும்; ஆர்ப்பரித்த புன்மைநிலை நீங்கும் !
தமிழரறம் செழித்தோங்கும்! உலகதனை வாங்கும் !
தாழ்வகலும் ! வாழ்வலரும் ! தமிழின்பம் அன்றோ ?

## பிழை திருத்தப் பட்டியல்-

சுவடி 13. ஓலை 5-6-இல் ஏற்பட்ட
அச்சுப் பிழைகட்கான திருத்தங்கள்.

| அட்டை | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2-ஆம் பக்கம் | 14 | தண்ணொளியாற் | தண்ணொளியார் |
| அட்டை 3-ஆம் பக்கம் | 3 | நீங்கொத்தே ! | பூங்கொத்தே ! |
| | 7 | மகனேநீ | மகளே ! நீ |
| | 12 | தலைசிறத்து | தலைசிறந்து |
| | 14 | அறிவுதிர்த்தி | அறிவுதிர்த்து |
| | 24 | கங்குல் பகல் | கங்குல் பகை |
| | 35 | முற்கருதி ! | முற்கருது ! |

# தமிழ்த் திருமண வாழ்த்துகள்.

**தி. தாயுமானவன் — வாசுகி.**

தி.பி. 2007 மடங்கல் 13 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29-8-76) யன்று தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் பெயரனும், மறை-திருநாவுக்கரசு அவர்களின் மகனுருமாகிய திருநிறை செல்வன் தாயுமானவனுக்கும், பி. குற்றால லிங்கத்தின் மகளாகிய திருநிறை செல்வி வாசுகிக்கும் மேலப்பாளையம் மணமகள் இல்லத்தில் மிகச் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தேறியது. அப்புத்தில்லறத்தார் நீடூழி வாழியென தென்மொழி அகங்குழைந்து வாழ்த்திசைக்கின்றது.

**மு. முருகன், க.இ., நூ.அறி.இ. — ப. அறிவரசி.**

தி.பி. 2007 மடங்கல் 18-ஆம் நாள் (3-9-76) வெள்ளியன்று; திரு. இரா. முத்துச்சாமி அவர்களின் இளைய மகனாகிய திருநிறை செல்வன் மு. முருகன். (சென்னை சட்டக் கல்லூரி நூலகம்) அவர்களுக்கும், திரு. செ. பன்னீர்செல்வம்-உலக முதல்வியரின் மூத்த மகளாகிய திருநிறை செல்வி ப. அறிவரசிக்கும் சென்னை இராயப்பேட்டையில் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமையில் திருமணம் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது. அப்புத்தில்லறத்தார் நீடூழி வாழியென தென்மொழி அகங்குழைந்து வாழ்த்திசைக்கின்றது,

**பொற்செழியன் — கத்தூரி.**

தி.பி. 2007 மடங்கல் 20-ஆம் நாள் (5-9-76) ஞாயிறன்று "தென்மொழி" பொற்செழியன் அவர்களுக்கும், வேலூர் திரு. துரைசாமி அவர்களின் மகள் திருநிறை செல்வி கத்தூரிக்கும், வேலூரில் திருமணம் மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது. அப்புத்தில்லறத்தார் நீடூறே வாழியென தென்மொழி அகங்குழைந்து வாழ்த்திசைக்கின்றது.

**இளவழகன் — வளர்மதி.** **கலியமூர்த்தி — வனிதா.**

தி. பி. 2007 மடங்கல் 27-ஆம் நாள் (12-9 76) ஞாயிறன்று திருநிறை செல்வன் இளவழகனுக்கும், திருநிறை செல்வி வளர்மதிக்கும், அதேபோழ்தில் திருநிறை செல்வன் கலியமூர்த்திக்கும், திருநிறை செல்வி வனிதாவுக்கும், உறந்தைராயன் குடிக்காட்டில் திருமணங்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது. அப்புத்தில்லறத்தினர் நீடூறே வாழத் தென்மொழி அகங்குழைய வாழ்த்திசைக்கின்றது.

**க. முத்தையன் — பா. அரசிறைவி.**

தி.பி. 2007 மடங்கல் 27-ஆம் பக்சுல் (12-9-76) ஞாயிறன்று, ஆசிரியர் திருநிறை செல்வன் க. முத்தையன் [கதிர் தமிழ்வாணனார் தம்பி] அவர்களுக்கும், திருநிறை செல்வி பா. அரசிறைவிக்கும் குடந்தையில் மிகச் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தேறியது. அப்புத்தில்லத்தார் நீடூறே வாழத் தென்மொழி அகங்குழைய வாழ்த்திசைக்கின்றது.